**வரையறுத்த கொழும்பு கொமேர்சல் பசளைக் கம்பனி - 2018**

## 1. முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வரையறுத்த கொழும்பு கொமேர்சல் பசளைக் கம்பனியின் 2019 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2019 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் கம்பனியின் 2019 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனியின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது கம்பனியின் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் கம்பனி தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக கம்பனியின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக கம்பனியின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என

நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது கம்பனியின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது கம்பனியின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

### 1.5.1 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | முன்னைய ஆண்டிற்கான செம்மையாக்கலாக ரூபா 2,396,566 காசுப் பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு இலாபத்திற்கு செம்மையாக்கியதனால் செயற்பாட்டு இலாபம் அத்தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | இக் கணக்கீட்டு தவறுகளை எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | ஆண்டிற்கான உள்ளபடியான காசு உட்பாய்ச்சலை கவனத்தில் கொண்டு காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | கம்பனிக்கு கிடைத்துள்ள ரூபா 550,785 தொகையான பெற | இக் கணக்கீட்டு தவறுகளை எதிர்காலத்தில் | உரிய பதிவுகளை மேற்கொள்ளும் போது |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டிய கப்பல் மற்றும் கொள்கலன் வைப்புக்களை கணக்கீடு செய்யும் போது பெறவேண்டிய வைப்புக்களிலிருந்து கழிப்பதற்குப் பதிலாக செலுத்த வேண்டிய வைப்பாக கணக்கீடு செய்ததன் காரணமாக பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய வைப்பு மீதிகள் அந்த அளவால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | உத்தியோகத்தர்களால் மேற்பார்வை செய்யப்படுதல் வேண்டும். |
| (இ) | மக்கள் வங்கியில் முதலீடு செய்யப்பட்டிருந்த நிலையான வைப்புக்களுக்காக கிடைக்க வேண்டிய வட்டி ரூபா 3,346,578 ஆக இருந்த போதிலும், அதனை ரூபா 3,735,715 ஆக கணக்கீடு செய்ததன் காரணமாக கிடைக்க வேண்டிய வட்டியும் வட்டி வருமானமும் ரூபா 389,137 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | இக் கணக்கீட்டு தவறுகளை எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | பெறவேண்டிய வட்டி வருமானத்தை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஈ) | 2018/19 ஆண்டில் கம்பனியால் மேற்கொள்ளப்பட்ட நிலையான வைப்பு முதலீட்டிற்காகப் பெற்றுக்கொள்ளப்பட்ட வட்டி வருமானம் ரூபா 290,570,503 ஆக இருந்த போதிலும் அது ரூபா 292,169,647 ஆக கணக்கீடு செய்ததன் காரணமாக பெற்றுக்கொள்ளப்பட்ட வட்டி வருமானம் ரூபா 1,599,144 ஆல் அதிகரித்துக்காட்டப்பட்டிருந்தது. | இக் கணக்கீட்டு தவறுகளை எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | பெறவேண்டிய வட்டி வருமானத்தை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (உ) | கொமர்சல் பசளைக் கம்பனி அமைந்துள்ள காணி களணி பிரதேச செயலகத்திற்குச் சொந்தமானதாக இருந்தும் அதன் பெறுமதியான ரூபா 9,000,000 கம்பனியின் சொத்தாகக் காட்டப்பட்டிருந்ததன் காரணமாக நிலையான சொத்துக்களின் பெறுமதி அந்த அளவினால் அதிகரித்துக்காட்டப்பட்டிருந்தது. | காணியின் உரிமையை கம்பனி பொறுபேற்பதற்குத் தேவையான நடவடிக்கை தற்பொழுது விரைவாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | காணியின் உரிமையை கம்பனி பொறுப்பெற்றதன் பின்னர் கம்பனியின் சொத்துக்களாக நிதிக் கூற்றுக்களில் சுட்டிக்காட்டுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டிற்கான வரிக் | இக் கணக்கீட்டு தவறுகளை | நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் |

| | | |
|---|---|---|
| கொடுப்பனவு ரூபா 150,827,298 ஆக இருந்தும் காசுப் பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் காசு வெளிப்பாய்ச்சலாக ரூபா 145,557,560 காட்டப்பட்டிருந்ததனால் வரிக் கொடுப்பனவு ரூபா 5,269,738 தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | போது சரியான பெறுமதியுடன் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுகின்றது என்பதனை முகாமைத்துவம் கவனித்துக்கொள்ளல் வேண்டும். |

### 1.5.2 கணக்காய்விற்கான எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

| | விடயம் | தொகை | வழங்கப்படாத கணக்காய்வுச் சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | வர்த்தக கடன் பட்டோர் | 89,021,859 | மீதிகளின் உறுதிப்படுத்தல் கடிதம் | மீதிகளின் உறுதிப்படுத்தல் கடிதம் கிடைத்திருக்காததனால் இதற்காக கவனம் செலுத்தி தேவையான நடவடிக்கை எடுப்பேன். | மீதிகளின் உறுதிப்படுத்தல் கணக்காய்விற்குக் கிடைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | திறைசேரியிட மிருந்து கிடைக்க வேண்டிய மீதி | 11,404,282, 749 | மீதிகளின் உறுதிப்படுத்தல் கடிதம் | இந்த மீதி சம்பந்தமாக மீதிகளின் உறுதிப்படுத்தலை வழங்குமாறு திறைசேரிக்கு தெரியப்படுத்தியிருந்தும் அது சம்பந்தமாக முறையான பெறுபேறு கிடைத்திருக்கவில்லை. | மீதிகளின் உறுதிப்படுத்தல் கணக்காய்விற்குக் கிடைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | கடன்பட்டோர் மீதி | 159,897,01 8 | மீதிகளின் உறுதிப்படுத்தல் கடிதம் | மீதிகளின் உறுதிப்படுத்தல் கடிதம் இதுவரை கிடைத்திருக்கவில்லை. | மீதிகளின் உறுதிப்படுத்தல் கணக்காய்விற்குக் கிடைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் முதலியவற்றுடன் இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் முதலியவற்றுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 2014/01 ஆம் | சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக | செயல் நடவடிக்கைத் திட்டம் தற்பொழுது தயாரிக்கப்பட்டு | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கை | கம்பனியால் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வருகின்றது. | |
| (ஆ) | 2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையால் திருத்தப்பட்ட நிதிப்பிரமாணம் 371(5) | செயற்பாடு பூர்த்தி செய்யப்பட்டு 10 நாட்களுக்குள் பெற்றுக்கொள்ளப்பட்ட செயல் நிமித்த உப கட்டுநிதி தீர்த்து வைக்கப்பட வேண்டிய போதிலும், கம்பனியின் 14 உத்தியோகத்தர்களால் 43 சந்தர்ப்பங்களின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 795,565 மொத்த தொகையான செயல் நிமித்த உப கட்டுநிதி 10 நாட்களிலிருந்து 89 நாட்கள் வரையான தாமதத்துடன் தீர்த்து வைக்கப்பட்டிருந்தது. | இந் நிலைமையைக் குறைப்பதற்கு எதிர்காலத்தில் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை வலுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெற்றுக்கொள்ளபட்ட உரிய முற்பணங்கள் உரிய செயற்பாடு பூர்த்தி செய்யப்பட்ட உடன் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 147,640,231 இலாபமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான இலாபம் ரூபா 193,532,284 ஆகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது வரிக்குப் பிறிதிய இலாபம் ரூபா 45,892,053 ஆல் குறைவடைந்திருந்தது. இந்த இலாபம் குறைவுக்கு விற்பனைக் கிரயம் அதிகரித்தல் பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனியால் ஹம்பாந்தோட்டையில் 6,000 தொன் கொள்ளளவுள்ள களஞ்சிய தொகுதியை நிர்மானிப்பதற்காக ரூபா 100 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் அதற்கிணங்க மீளாய்வாண்டின் போது உரிய ஆரம்ப நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |

| | | | |
|---|---|---|---|
| (i) | பெறுகை வழிகாட்டிக்கோவையின் பிரகாரம் அரசாங்கத்திற்கு சிக்கனம், செயற்திறன் மற்றும் வினைதிறன் உச்ச அளவில் கிடைக்கும் வகையில் பெறுகை நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டிய போதிலும் பாரிய அளவிலான நிர்மாணத்தின் போது ஈடுபடுத்தப்படுகின்ற வடிவமைத்தல் மற்றும் நிர்மாணித்தல் (Design and Build) ஒப்பந்த முறைமை மேலே குறிப்பிட்ட களஞ்சியத் தொகுதி நிர்மாணிப்பதற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தது. | இதன் போது போட்டி கேள்வி முறைமைக்குப் புறம்பாக இடம் பெற்றிருக்காததுடன் கேள்வி கோரும் முறைமைக்காக இரட்டை / பல்கட்ட முறைமையின் கீழ் வடிவமைத்தல் மற்றும் நிர்மாணித்தல் (Design and Build) முறைமை தெரிவு செய்யப்பட்டிருந்தது. | பெறுகை வழிகாட்டிக் கோவைக்கும் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கும் இணங்க அரசாங்கத்திற்கு உச்ச அளவு நலன் கிடைக்கும் வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.8.1 (ஆ) பிரிவின் பிரகாரம் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு நியமிக்கப்பட வேண்டிய போதிலும் ஆலோசனை நிறுவனததினால் 2018 திசெம்பர் மாதத்தில் தயாரிக்கப்பட்ட கேள்வி ஆவணங்களை மதிப்பீடு செய்வதற்காக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு 2019 ஏப்ரல் மாதத்தில் நியமிக்கப்பட்டிருந்தது. | விசேட அறிவுள்ள உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டியிருந்ததனாலும் இது திசெம்பர் மாதத்திலிருந்து 2019 ஏப்ரல் என்ற காலத்தில் எங்கள் நிறுவனத்தின் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக தலைவர் இல்லாததனாலும் இந் நடவடிக்கைகளில் தாமதம் ஏற்பட்டுள்ளது. | பெறுகை வழிகாட்டிக் கோவைக்கும் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கும் இணங்க அரசாங்கத்திற்கு உச்ச அளவு நலன் கிடைக்கும் வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.7.4 ஆம் பிரிவின் பிரகாரம் பெறுகைக் குழுவிற்க தொடர்புபட்ட பெறுகை விடயம் தொடர்பான அறிவுள்ள ஒரு அங்கத்தவர் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும் அமைச்சின் செயலாளரால் நியமிக்கப்படுகின்ற ஆலோசகர்களைத் தெரிவு செய்யும் குழுவிற்கு கட்டிட நிர்ாணங்கள் மற்றும் பெறுகை நடவடிக்கைகள் | விடயத்தில் விசேட அறிவினைக் கொண்ட அங்கத்தவராக முன்னாள் தலைவர் தகைமை கொண்ட மனை வடிவமைப்பு நிபுனராகச் செயற்பட்டுள்ளார். | பெறுகை வழிகாட்டிக் கோவைக்கும் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கும் இணங்க அரசாங்கத்திற்கு உச்சளவு நலன் கிடைக்கும் வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொடர்பான விடயத்தில் விசேட அறிவினைக் கொண்ட அங்கத்தவர் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை | | |
| (iv) | தொழிலநுட்ப மதிப்பீட்டுக் குழுவின் 2019 ஏப்ரல் 08 ஆந் திகதிய அறிக்கைக்கு இணங்க தெரிவு செய்யப்பட்ட நடைமுறையானது வழிகாட்டிக் கோவையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்கியிருக்காமை மற்றும் ஆலோசனை நிறுவனம் சம்பந்தமாக இணக்கப்பாட்டினை வழங்குவதற்கு முடியாமையின் அடிப்படையில் ஒப்பந்த நடவடிக்கை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க ஆலோசனை நிறுவனதத்திற்குச் செலுத்தப்பட்ட ரூபா 564,715 பணம் விறைவற்ற செலவாக மாறியிருந்தது. | 2019/04/08 ஆந் திகதிய தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழு அறிக்கையின் பிரகாரம் குழுவின் அதிகமானோர் இணக்கப்பாட்டை வெளியிட்டிருந்ததுடன் அமைச்சின் மூலம் நியமிக்கப்பட்ட நிறைவேற்று பொறியியலாளரின் அபிப்பிராயம் மற்றும் காரணங்களை காட்டியதன் அடிப்படையில் இந்த ஒப்பந்தத்தை நிறுத்துதல் இடம் பெற்றுள்ளது. | பெறுகை வழிகாட்டிக் கோவைக்கும் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கும் இணங்க அரசாங்கத்திற்கு உச்சளவு நலன் கிடைக்கும் வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அபிவிருத்தி நிதித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் 2018 ஒக்தோபர் 05 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் பசளை இறக்குமதிக்காக ஆரம்பிக்கப்பட்ட நாணயக் கடிதங்கள் தொடர்பான கொடுப்பனவுகள் தாமதமடைந்ததன் காரணமாக வங்கியினால் அறவீடு செய்த வட்டியை தீர்த்து வைத்தல் பசளைக் கம்பனியின் பொறுப்பு எனக் காட்டப்பட்டிருந்தது. எனினும், மீளாய்வாண்டில் கம்பனியால் வங்கிக்குச் செலுத்தப்பட்ட ரூபா 101,801,619 தொகையான வட்டியை | ரூபா 101 மில்லியன் வட்டி கம்பனியால் மேற்கொள்ளப்பட்டிருந்தமை காட்டப்பட்டிருந்தும் கம்பனியின் நிலையான சொத்துக்கள் பயன்படுத்தப்பட்டதன் காரணமாக ரூபா 100 மில்லியன் அளவான நிலையான வைப்பு வட்டி இழக்கப்பட்டிருந்தமை கணக்காய்வின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. பசளைகளை துறைமுகத்திலிருந்து விடுவிப்பதற்கான அனைத்து செலவு நிலையான வைப்புக்களைப் பயன்படுத்தி | அபிவிருத்தி நிதித் திணைக்களத்தின் ஆலோசனைகளுக்கு இணங்க நாணயக் கடிதங்களுக்குரிய கொடுப்பனவுகளை மேற்கொண்டு அரசாங்கத்தின் நிதியை விளை திறனாக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திறைசேரிக்குச் செலுத்த வேண்டிய பெறுமதியிலிருந்து கழித்து செலுத்தப்பட்டிருந்தது. மேலும், மீளாய்வாண்டில் நிர்ணயிக்கப்பட்டவாறு அக்கொடுப்பனவை மேற்கொள்ளுதல் உரிய உத்தியோகத்தரின் பொறுப்பாக இருந்த போதிலும் அந்த உத்தியோகத்தரின் கவனயீனத்தின் காரணமாக கம்பனிக்கு அதிகளவான பணத்தை வட்டியாகச் செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. | மேற்கொள்ளப்படுகின்றது. அதற்கிணங்க கணக்காய்வின் மூலம் காட்டப்பட்டுள்ளவாறு நிலையான வைப்புக்கள் பயன்படுத்தபடுமாகவிருந்தால் நிறுவனத்தின் தொழிற்பாட்டு மூலதனத்திற்காக அதிகளவு தாக்கம் ஏற்படுவதுடன் பசளைகளைப் பகிர்ந்தளித்தல் கடமையை தொடர்ச்சியாக மேற்கொள்ளுதல் தொடர்பாக அதிகளவு ஆபத்து ஏற்பட்டிருக்கும். | |
| (ஆ) | கம்பனியின் அலுவலகம் அமைந்துள்ள காணியை 1997 ஆம் ஆண்டின் போது அரசாங்கத்தினால் பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் இறுதி வரை அதன் சட்டரீதியான உரிமையை கம்பனிக்கு ஒப்படைப்பதற்கு முடியாதிருந்தது. | காணியின் உரிமையை கம்பனியின் பெயருக்கு ஒப்படைப்பதற்காக விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | காணியின் சட்டரீதியான உரிமையை கம்பனிக்கு விரைவாக ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | தகமைபெற்ற ஒரு மதிப்பீட்டாளரினால் கம்பனியின் நிலையான சொத்துக்களை மதிப்பீடு செய்யும் போது ஏனைய நிறுவனத்திற்குச் சொந்தமான சொத்தாகிய கம்பனி அமைந்துள்ள காணியையும் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்ததன் காரணமாக அதற்காகவும் மதிப்பீட்டாளருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | காணியின் சட்டரீதியான உரிமையை நிறுவனத்தினால் பொறுப்பேற்பதற்காக நிறுவனத்தினால் மேற்கொண்ட கடமைகளின் விளைவாக 2014 ஒக்தோபர் 01 ஆந் திகதிய அமைப/14/1224/536/030 ஆம் இலக்க அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது. | காணியின் சட்டரீதியான உரிமையை கம்பனிக்கு விரைவாக ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | அரசாங்க தொழில் முயற்சி வணிக நடவடிக்கைகளை குறுங்கால மற்றும் நீண்ட கால நோக்குடன் முகாமைத்துவம் செய்ய வேண்டியிருந்ததனால் ஆகக் குறைந்தது. 03 ஆண்டுகள் காலத்திற்காக கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டு அதற்கிணங்க உத்தேச இலக்குகளை அடைந்து கொள்வதற்கு முடியுமான வகையில் வியாபாரத்தை செயற்படுத்துதல் பணிப்பாளர் சபையின் | கூட்டினைந்த திட்டத்தை தயாரிப்பதற்காக ஒரு நிறுவனத்துடன் நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதுடன் மிகுதியான 3 ஆண்டுகளுக்காக அத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. | கம்பனியால் கூட்டினைந்த திட்டம் தயரிக்கப்பட்டு அதற்கிணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பொறுப்பாக இருந்த போதிலும் கம்பனியால் அவ்வாறான கூட்டினைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (உ) | பசளைகளை இறக்குமதி செய்வதற்காக ஆரம்பிக்கப்பட்ட நாணயக் கடிதத்தை நிர்ணயிக்கப்பட்ட திகதியில் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாததனால் உரிய வங்கியினால் அப்பெறுமதியை கடன் பணத்திற்கு பரிமாற்றம் செய்யும் போது ரூபா 2,229,079 தரகுப் பணமும் செலுத்த வேண்டியிருந்தது. | பசளைகளை இறக்குமதி செய்வதற்காக ஆரம்பிக்கப்பட்ட நாணயக் கடிதத்தைத் தீர்த்து வைப்பதற்காக பொதுத் திறைசேரியிடமிருந்து தீர்த்து வைக்கும் வரை 14% குறுங்கால கடன் பணத்திற்கு பரிமாற்றம் செய்ததனால் 8% அளவான வட்டி நிறுவனத்திற்கு சேமிப்பாக இருந்தது. மேலும் அந்த நாணய கடித பெறுமதியை குறுங்கால கடனாக மாற்றும் போது வங்கியினால் 0.001% தரகுப் பண பட்டியல் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது டன் கணக்காய்வின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டதானது அவ்வாறு மொத்த உண்டியல் பெறமதியில் 0.001% ஆன தரகுப் பணமாகும். | அரசாங்கத்தின் நிதிகைள விளைதிறனாகவும் செயற்திறனாகவும் செலவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | கம்பனியின் தேவைப்பாட்டை சரியாக இனங்கண்டு கொள்வனவு செய்தல் இடம் பெறாமையின் காரணமாக 2017 ஆம் ஆண்டின் போதும் அதற்கு முன்னைய ஆண்டுகளின் போதும் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 2,548,619 பெறுமதியான 20,556 பொருட்கள் களஞ்சியத்தில் விளைவற்றுக் காணப்பட்டன. | இப் பெறுமதியில் தற்பொழுது பாவனைக்கு எடுத்துக்கொள்ளப்படாத எழுது கருவிகள் அடங்கியுள்ளதுடன் அவற்றை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பேன். மேலும், பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாத இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களுக்காக ஈடுபடுத்தப்பட்ட பொருட்களையும் இனங்கணடடு அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கம்பனிக்குத் தேவையான பொருட்களை சரியாக இனங்காண்பதற்கும் அதற்காக தேவையான முயற்சிகள் எடுப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | 1997ஆம் ஆண்டிலிருந்து | 1997 ஆம் ஆண்டு சனவரி | இனங்காணப்படாத |

| | | | |
|---|---|---|---|
| | முன்கொண்டு வரப்பட்டுக் காணப்படும் ரூபா 61,016,519 தொகையான இனங்காணப்படாத வருமான ஒதுக்கம் காணப்பட்டிருந்தும் முகாமைத்துவத்தினால் அதனை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 20 ஆந் திகதி கம்பனியை அரசாங்கம் மீண்டும் பொறுப்பேற்கும் போது கம்பனியின் நடைமுறைச் சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் ஆரம்ப மீதியை கணிக்கும் குழுவினால் தயாரிக்கப்பட்ட கணக்குகளுக்கு இணங்க மொத்த சொத்துக்குளுக்கும் பொறுப்புக்களுக்குமிடையே ரூபா 237,451,803.55 செலவு மீதியான வித்தியாசம் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன் ‘‘புனரமைப்பு மற்றும் மீள் கணிப்பு ஒதுக்கமாக’’ பெயரிடப்பட்டிருந்தது. இந்த ஒதுக்கத்தை பதிவு செய்ததன் பின்னர் மேலும் ரூபா 61,016,519 மிகுதியாக இருந்தது. மேலும், எதிர்காலத்தில் அவ்வாறு இனங்காணக்கூடிய சொத்துக்கள் பொறுப்புக்கள் மற்றும் நிலையான சொத்துக்களை விற்பனை செய்வதனாலான மிகை (ளரசிடரள) யை இந்த ஒதுக்கத்தினூடாக பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வருமான ஒதுக்கத்தை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஏ) | அவசர நிதித்தேவைகளின் போது பணத்தைப் பெற்றுக்கொள்வதற்கு 03 மாதங்களான குறுகிய காலத்திற்கு முதலீடு செய்யப்பட்ட ரூபா 186,132,368 தொகையான அழைப்பு வைப்புக்கள் (call Deposit) காணப்பட்டிருந்தும் 12 சதவீத வருடாந்த வட்டிக்கு ஒரு வருட காலத்திற்கு நிலையான வைப்புக்களில் முதலீடு செய்த ரூபா 100 மில்லியனை முதிர்ச்சியடைவதற்கு 02 மாதங்களுக்கு முன்னர் பெற்றுக்கொண்டதன் காரணமாக கம்பனிக்கு ரூபா 8,745,205 வட்டி வருமான இழப்பு ஏற்பட்டிருந்தது. | உரிய வைப்புக்களானது நாணயக் கடிதத்தை திறப்பதற்கான பிணையாக வைக்கப்பட்டிருந்ததனால் அக் கேள்வி வைப்புக்களை மேற்கூறிய நாணயக் கடிதத்தை தீர்த்து வைப்பதற்கு ஈடுபடுத்த முடியாதிருந்தது. எனவே தேவைப்பாட்டின் அடிப்படையில் விரைவாக பெற்றுக்கொள்ளக் கூடியதாகிருந்த 226-60-01-00010419-2 ஆம் இலக்க ரூபா 100 மிலலியன் பெறுமதியான நிலையான வைப்புக்கள் மேற்கூறிய நாணயக் கடிதத்தை தீர்த்து வைப்பதற்கு ஈடுபடுத்தப்பட்டது. | அரசாங்கத்தின் நீதிகளை உச்ச அளவு விளைதிறனாகப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.3 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2016 ஆம் ஆண்டிலிருந்து வெற்றிடமாகக் காணப்பட்ட சந்தைப்படுத்தல் முகாமையாளர் பதவிக்காக தகைமையுள்ள ஒரு உத்தியோகத்தரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது 2016 ஏப்ரல் 04 ஆந் திகதியிலிருந்து அப்பதவியில் பதிற் கடமை செய்வதற்காக ஒரு உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டிருந்தனர். | பல சந்தர்ப்பங்களில் உரிய பதவிக்காக ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தும் தகமைபெற்ற ஒரு உத்தியோகத்தர் முன்வராததால் மீண்டும் விண்ணப்பங்களைக் கோரி ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |